S.பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 354 | 16.06.2026 | TUESDAY | AANI : 2 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 354 | 16.06.2026 | செவ்வாய்கிழமை | ஆனி : 2 | விலை : ரூ.5/-

## காலை உணவுத் திட்டம்

# “8ம் வகுப்பு வரை விரிவாக்கம்”

## முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: ஜூன்.16-

முதல்வரின் காலை உணவுத் திட்டம் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கும் விரிவாக்கம் செய்யப்படும் என தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் நேற்று (ஜூன் 15) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின்கீழ் செயல்பட்டு வரும் சமூக நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை ஆகிய துறைகளின் மூலம் குழந்தைகள், பெண்கள், திருநங்கைகள் மற்றும் மூத்த குடிமக்கள் ஆகியோரது நலனுக்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் இல்லங்கள், பல்வேறு திட்டங்கள், சமூக சட்டங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

‘வெற்றித் தமிழகம்’ தொலைநோக்கு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள துறை சார்பாக செயல்படுத்தக் கூடிய திட்டங்கள், அதற்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடுகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

மேலும், பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) செயல்பாடுகள், தத்தெடுக்கும் மையங்கள், மகளிர், குழந்தைகள், மூத்தகுடிமக்கள் ஆகியோருக்காக செயல்படுத்தப்படும் உதவி எண்கள், குழந்தைகளுக்கான காலை மற்றும் மதிய உணவுத் திட்டம், அங்கன்வாடி மையச் செயல்பாடுகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை, தொடர்புடைய பயனாளர்களான குழந்தைகள், பெண்கள், திருநங்கைகள் மற்றும் மூத்த குடிமக்களிடம் தடையின்றி மற்றும் துரிதமாகக் கொண்டு சேர்க்கவேண்டும் எனவும், குழந்தைகள் பாதுகாப்பு குறித்தும், போதைப்பொருள் பழக்கத்திற்கு உள்ளாகாதபடி அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், மேற்படி பழக்கத்திற்கு ஆளான குழந்தைகளை மீட்டு அவர்களுக்கு உரிய மறுவாழ்வு அளித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முதல்வர் அறிவுறுத்தினார்.

மேலும், ‘முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை’ 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விரிவாக்கம் செய்திட ஏதுவாக, தந்தை பெரியாரின் பிறந்தநாளான செப்டம்பர் 17ஆம் தேதி இத்திட்டத்தை முதற்கட்டமாக தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கு.ஜெகதீஸ்வரி, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எம்.ஏ.சித்திக், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறைச் செயலாளர் ம. பல்லவி பல்தேவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 தொகுதிகளில் இடைத்தேர்தல் அறிவிக்க கூடாது என அதிமுக வழக்கு அரசு தரப்பு சொல்வது என்ன?

சென்னை: ஜூன்.16-

அதிமுக எம்எல்ஏக்கள் 4 பேர் ராஜினாமா செய்த நிலையில், அந்த 4 தொகுதிகளில் இடைத்தேர்தல் அறிவிப்புக்கு தடை விதிக்கக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக வழக்கு தொடர்ந்துள்ளது.



தமிழக சட்டப் பேரவையில் கடந்த மே 13ம் தேதி தவெக அரசு கொண்டுவந்த பெரும்பான்மை வாக்கெடுப்பின்போது, அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தலைமையில் 25 அதிமுக எம்எல்ஏக்கள், தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதைத்தொடர்ந்து, அவர்களுக்கு எதிராக கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் தகுதி நீக்க நடவடிக்கை எடுக்கக் கோரி, பேரவைத் தலைவரிடம் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி மனு அளித்திருந்தார்.

இந்நிலையில், அதிமுக எம்எல்ஏக்கள் மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), ஜெயக்குமார் (பெருந்துறை), சத்தியபாமா (தாராபுரம்), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்), ஆகியோர் தங்கள் எம்எல்ஏ பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, தவெகவில் இணைந்தனர்.

தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் உள்ளபோது, அவர்களின் ராஜினாமா கடிதங்களை சட்டப்பேரவைத் தலைவர் ஏற்றுக் கொண்டதை எதிர்த்து தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பில் அதன் தலைவர் எம்.எல். ரவி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருள் முருகன் அமர்வு முன் விசாரணைக்கு வந்தபோது, அதிமுக முன்னாள் அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் எஸ்.ஆர்.ராஜகோபால், “4 எம்எல்ஏக்கள், தவெகவில் இணைவது குறித்து ஏற்கெனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். ராஜினாமா செய்ததும், தவெகவில் இணைந்துள்ளதால், இது திடீரென எடுத்த முடிவெல்ல.

இதில் அரசியல் சட்டவிதிகள் மீறப்பட்டுள்ளதால், ராஜினாமாவை ஏற்ற உத்தரவை ரத்து செய்யக் கோரியும், அந்த 4 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடைவிதிக்கக் கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளதால், அந்த வழக்கையும் சேர்த்து விசாரணைக்கு எடுக்க வேண்டும்” என கேட்டுக் கொண்டார்.

தமிழக அரசுத் தரப்பில் ஆஜரான தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், “கொறடா உத்தரவை மீறி, தவெக அரசுக்கு வாக்களித்த 25 அதிமுக எம்எல்ஏக்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளித்த அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, 21 பேரின் மன்னிப்பை ஏற்றுக் கொண்டதாக கடிதம் அளித்தார். அதனால் அவர்கள் மீதான நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

ராஜினாமா செய்த 4 பேரும் தாமாக முன்வந்து பதவி விலகியுள்ளனர். இருப்பினும், தகுதி நீக்க நடவடிக்கை தொடர்பாக விளக்கம் கேட்டு அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. சட்டப்பேரவை விதிப்படி, அவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் உத்தரவு பிறப்பிக்கப்படும்” எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, அதிமுக தரப்பின் கோரிக்கையை ஏற்ற நீதிபதிகள், வழக்குகளின் விசாரணையை ஜூன் 17ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.

## “கடலூர் ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு தமிழக அரசு அனுமதி அளிக்கக் கூடாது” : சீமான்

சென்னை: ஜூன்.16-

‘கடலூர் பரங்கிப்பேட்டை கடற்பகுதியில் புதிதாக 4 ஹைட்ரோகார்பன் கிணறுகள் அமைக்கும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளிக்கக்கூடாது’ என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை அருகிலுள்ள கடற்பகுதியில் புதிதாக மேலும் 4 ஹைட்ரோ கார்பன் கிணறுகளை அமைக்க ஹிந்துஸ்தான் எண்ணெய் நிறுவனம் திட்டமிட்டுள்ளது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. சுற்றுச்சூழலைச் சீரழிக்கும் ஹைட்ரோ கார்பன் திட்டங்களை எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டில் அனுமதிக்கக்கூடாது என்று போராடி வரும் நிலையில் ஹிந்துஸ்தான் நிறுவனம் 4 ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு விண்ணப்பித்துள்ளது வன்மையான கண்டனத்துக்குரியது.

நிலத்தையும், நீரையும் மாசுபடுத்திச் சுற்றுச்சூழலை சீர் கெடுக்கும் ஹைட்ரோ கார்பன் திட்டங்களை தமிழ்நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அனுமதிக்கக்கூடாது என்று நாம் தமிழர் கட்சி தொடர்ந்து போராடி வருகின்றது. காவிரிப்படுகையைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட சுற்றுச்சூழல் சீர்கேடுகள் திட்டங்களை அனுமதிக்கமாட்டோம் என்று உறுதியளித்தது.

அதனையடுத்து, திமுக ஆட்சிக்காலத்தில் திருவாரூர் மாவட்டம் பெரியகுடி, ராமநாதபுரம் கடற்கரை பகுதி, பரங்கிப்பேட்டை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் தொடங்கவிருந்த ஹைட்ரோ கார்பன் திட்டங்களும் கடும் எதிர்ப்புப்போராட்டங்கள் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

தற்போது மீண்டும் ஹிந்துஸ்தான் எண்ணெய் நிறுவனம் கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டையிலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவில் கடலுக்குள் ரூ.425 கோடி மதிப்பீட்டில் 4 புதிய ஹைட்ரோகார்பன் எண்ணெய் கிணறுகள் அமைக்க ஹைட்ரோ கார்பன் கிணறுகள் அமைக்க தமிழ்நாடு கடலோர மண்டல மேலாண்மை ஆணையத்திடம் (TNCZMA) சுற்றுச்சூழல் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளது.

கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை கடற்பகுதி பாரம்பரிய மீன்பிடித் தொழில் பகுதி மட்டுமல்லாது சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். இப்பகுதியில் தொடங்கப்படும் ஹைட்ரோ கார்பன் திட்டமானது கடல் நீரை மாசுபடுத்தி, மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் பல்லுயிர் பெருக்கத்தை அழித்து, பாரம்பரிய மீன்பிடித் தொழிலுக்கே பேராபத்தை ஏற்படுத்தும்.

தனியார் பெருநிறுவனங்களின் நலனுக்காக மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், பல்லுயிர் பெருக்கத்தையும், கடல் வளத்தையும் அழித்தொழிக்கும் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு தவெக அரசு அனுமதியளிக்க வேண்டாமென வலியுறுத்துகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

## “ஜோசப் விஜய் ப்ரோ... எத்தனை நாள் உங்கள் ஆட்சி தாங்கும்?” நயினார் நாகேந்திரன்

சென்னை: ஜூன்.16-

“தவெக ஆட்சிக்கும், திமுக ஆட்சிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. முதல்வர் விஜய் உடனடியாக தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்” என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “முதல்வர் விஜய் ஆட்சியை வெற்றிகரமாக நடத்துவார் என பார்த்தால், நிலைமை தலைகீழாக சென்று கொண்டிருக்கிறது. திமுக ஆட்சியில் 125 சதவீதம் பாலியல் குற்றங்கள் அதிகம்; ஆனால், தவெக ஆட்சியில் இப்போதே 100 சதவீதத்தை தாண்டி சென்று கொண்டிருக்கிறது.

கும்மிடிப்பூண்டியில் 3 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டிருக்கிறார். அனைவரது வீட்டிலும் பெண்பிள்ளைகள் இருக்கின்றனர். தவெக ஆட்சிக்கும், திமுக ஆட்சிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

இது சிறுபான்மையின அரசுதான் என முதல்வர் விஜய் சட்டப்பேரவையில் சொன்னபோது நன்றாகதான் இருந்தது. ப்ரோ, இந்த 3 வயது குழந்தையைப் பாருங்கள். நரம்பு புடைக்க பேசுனீர்களே ப்ரோ, இந்த குழந்தைகளுக்கு யார் பதில் சொல்வார்கள். எத்தனை நாட்கள் உங்கள் ஆட்சி தாங்கும்? சட்டம் ஒழுங்கு சரியில்லை. ஜோசப் விஜய் ப்ரோ, உங்களுக்கு காது கேட்கிறதா?

தவெக ஆட்சி ஒரு விஷக்கிருமி. விஜய் முதுகெழும்பு இல்லாத முதல்வர். சட்டத்தை பாதுகாக்க தவறிய முதல்வர் விஜய் உடனடியாக தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். ஓர் ஆட்சியைப் பற்றி, 6 மாதத்துக்கு குறை சொல்லக் கூடாது என்றுதான் இருந்தோம். ஆனால், நாளுக்கு நாள் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது” என்று அவர் கூறினார்.

## வெண்டிலேட்டரில் தமிழக சட்டம் ஒழுங்கு: கும்மிடிபூண்டி பாலியல் வன்கொடுமைக்கு உதயநிதி கண்டனம்

சென்னை, ஜூன்.16-

‘தமிழகம் முழுக்க சட்டம் ஒழுங்கு, வெண்டிலேட்டரில் வைக்கும் அளவுக்கு செத்துக் கொண்டிருக்கிறது’ என கும்மிடிபூண்டியில் 3 வயது குழந்தை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “கும்மிடிப்பூண்டி அருகே 3 வயது குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்து புதரில் வீசப்பட்டதில் அக்குழந்தை உயிரிழந்தது அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்.

இச்சம்பவத்தில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்துக் கடுமையான தண்டனையைக் காவல்துறை பெற்றுத்தர வேண்டும். வடக்கே எங்கோ தூரத்தில் நடந்ததாக நாம் செய்திகளில் படித்த குற்றச் சம்பவங்கள் எல்லாம், இந்த சோஃபா மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் தினசரி தொடர்கதை ஆவது கண்டிக்கத்தக்கது.

தேர்தல் பிரச்சாரத்தில் சட்டத்துக்கு புறம்பாக வாக்குக்கேட்பதற்கான டூல் ஆக குழந்தைகளைப் பயன்படுத்திய முதலமைச்சர், குழந்தைகள் பெண்கள் பாதுகாப்பில் தொடர்ந்து கோட்டை விடுகிறார்.

சேலத்தில் 50க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அவருடைய கட்சியைச் சேர்ந்தவர் பாலியல் தொல்லை கொடுத்தது, ஆலந்தூரில் அவரது கட்சி பிரமுகர் கணவனை இழந்த பெண்ணிடம் அத்துமீறியது, சிங்கப்பெண் படையை உருவாக்கிய சில தினங்களில் சிவகங்கையில் பெண் காவலருக்கே பாலியல் தொல்லை. இப்படி தமிழ்நாடு முழுக்க சட்டம் ஒழுங்கு, வெண்டிலே ட்டரில் வைக்கும் அளவுக்கு செத்துக் கொண்டிருக்கிறது.

ஆட்சி அமைத்து ஒரு மாதத்துக்கு மேலாகியும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முதல்வர் எந்த ஓர் உறுதியான நடவடிக்கையையும் எடுப்பது போல தெரியவில்லை. அடுத்த கட்சி ஆட்களை விலைக்கு வாங்கும் நேரத்தில், கொஞ்சமாவது சட்டம் ஒழுங்கை பாதுகாக்க முதல்வர் அக்கறை காட்ட வேண்டும்.

தமிழகத்தில் சீரழியும் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற உடனே காவல்துறை அதிகாரிகள் அளவில் உயர்நிலைக் கூட்டத்தை நடத்தி, மண்டல மாவட்ட அளவிலான காவல்துறை அதிகாரிகளுக்கு குற்றங் களைத் தடுப்பதற்கான கடுமையான உத்தரவுகளை முதல்வர் பிறப்பிக்க வேண்டும்.

இனியும் இது மாதிரியான குற்றச்ச ம்பவங்கள் தொடர்ந்தால், எங்கள் தலைவரின் அனுமதியைப் பெற்று, மக்களைத் திரட்டி வீதியில் இறங்கி போராடவும் தி.மு.கழகம் தயங்காது.” எனத் தெரிவித்துள்ளார்.



■ தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாநில அளவில் நடத்திய துளிர் திறனறிதல் தேர்வில், அல்அமீன் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பங்கேற்று வெற்றி பெற்றதற்கான பாராட்டுச் சான்றிதழை வழங்கி தலைமையாசிரியர் ஷேக்நபி மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் உதவித் தலைமையாசிரியர்கள் முகமது ரபி மற்றும் அல்ஹாஜ் முகமது.



## “மதுரை செய்தியாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்குக!” ஆட்சியர் ஆகாஷிடம் உழைக்கும் செய்தியாளர்கள் சங்கம் மனு!

மதுரை, ஜூன்.16-
தமிழ்நாடு உழைக்கும் செய்தியாளர்கள் சங்கம் சார்பில், மதுரை செய்தியாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியரிடம் முக்கியக் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.
தமிழ்நாடு உழைக்கும் செய்தியாளர்கள் சங்க மாநிலத் தலைவர் ரவிச்சந்திரப் பாண்டியன் தலைமையில், மதுரை மாவட்ட ஆட்சியர் ஆகாஷ் அவர்களிடம் சங்க நிர்வாகிகள் கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர். மனுவில், உழைக்கும் செய்தியாளர்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள செய்தியாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா உடனடியாக வழங்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.மேலும், சங்க உறுப்பினர்களுக்கு அரசு அங்கீகார அடையாள அட்டை மற்றும் வாகனங்களுக்கான ஊடக ஸ்டிக்கர்களை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வாயிலாக உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பத்திரிகையாளர் நல வாரியத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை அரசு செய்ய வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது. ணஇந்நிகழ்வின் போது மாநிலப் பொதுச் செயலாளர் சமய செல்வம், துணைத் தலைவர்கள் வல்லத்தரசு, ஜெயராமன், மாநிலப் பொருளாளர் புஷ்பராஜன், மாநிலச் செய்தித் தொடர்பாளர் அஜீத்குமார், மாநிலத் தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர்கள் பாண்டி முருகன், மணிகண்டன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் வீரக்குமார், நாகப்பன் உட்படப் பத்திரிகையாளர்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டனர்.



■ மதுரை தெற்கு மாவட்ட சார்பில் தமிழக முதல்வர் விஜய் 52 வது பிறந்த நாளை முன்னிட்டு, மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் தங்கபாண்டியன் தலைமையில் ரத்ததான முகாம் நடைபெற்றது. விழா ஏற்பாட்டினை விராட்டிபத்து பகுதி டிவிகேவிவி பார்டினர் சிறப்பாக செய்திருந்தனர். இந்த முகாமில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இரத்த தானம் வழங்கினார்.

## தெலங்கானா அரசுப் பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் தொடக்கம்

தெலங்கானா, ஜூன்.16-
தெலங்கானாவில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம் இன்று அரசு சார்பில் தொடங் கப்ப ட்டுள்ளது. இதில் சிறுதானிய இட்லி, ராகி கூழ் மற்றும் பா ல் ஆகியவை இடம்பெற்றுள் ளன.தெலங்கானா அரசு 202627 கல்வியாண்டின் தொடக்கத்தை முன்னிட்டு, இன்று ஹைதராபாத்தில் மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ், 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்குச் சத்தான காலை உணவு வழங்கப்படுகிறது. இதில் சிறுதானிய இட்லி, ராகி கூழ் மற்றும் பால் ஆகியவை இடம்பெற்றுள்ளன. தொடக்க விழாவின் ஒரு பகுதியாக, மாணவர் களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டன.இந்தக் காலைஉணவுத் திட்டத்தின் கீழ், திங்கள் முதல்



சனிக்கிழமை வரைமாணவர் களுக்குப் பல்வேறு வ கையான உணவுகள் சுழற்சி முறையில் வழங்கப்படுகின்றன. இதில் சிறுதானியங்கள் சார்ந்த உணவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. உணவுப் பட்டியலில் சிறுதானிய இட்லி மற்றும் ராகி கூழ், பால், தோசை, பூரி, போண்டா போன்ற உணவுகளும் இடம்பெற்று ள்ளனஇந்தத் திட்டத்தை ஹைதராபாத்தில் தொடங்கி வைத்த போக்குவரத்து மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் பொன்னம் பிரபாகர் கூறுகையில், “எந்தவொரு குழந்தையும் வெறும்வ யிற்றுடன் பள்ளிக்குச் செல்வதை தவிர்க்கும் வகையில் இத்திட்டம்அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் அரசு கல்வி நிறுவனங்களிலேயே காலை மற்றும் மதிய உணவை உட்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன். மாணவர்கள் உடல் ரீதியாகவும், மனரீ தியாகவும் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்யும் நோக்கிலேயே இந்தச் சத்தான உணவு வழங்கப் படுகிறது” என்று தெரி வித்துள்ளார்.

## பள்ளிப் பருவத்திலேயே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் விழிப்புணர்வு! மதுரை அல்அமீன் பள்ளி காவல்துறை கூட்டு முயற்சி!



மதுரை, ஜூன்.16-
மதுரை மாநகர காவல்துறை, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சார்பில் அல்அமீன் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கான சமூக நல்லிணக்க விழிப்புணர்வு நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது .*காவல்துறையின் விழிப்புணர்வு உரை:*இவ்விழாவிற்குப் பள்ளித் தலைமையாசிரியர் ஷேக் நபி தலைமை தாங்கினார். காவல் உதவி ஆய்வாளர் வசந்தா முன்னிலை வகித்து மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார். அப்போது, மாணவர்கள் சமுதாய உரிமைகள், கடமைகள் மற்றும் பொறுப்புகளை உணர்ந்து செயல்பட வேண்டும் என்றும், போதைப்பொருட்கள் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடித்தல், அனைவரிடமும் நல்லிணக்கத்தோடு நட்பு பாராட்டுதல் மற்றும் இணையவழி குற்றங்களில் இருந்து தவிர்ந்திருப்பது ஆகியவற்றின் மூலம் எதிர்காலத்தில் நல்ல பதவிகளை அடைந்து சிறந்த இந்தியக் குடிமகனாக உருவெடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.*பள்ளி மற்றும் காவல் அதிகாரிகள் பங்கேற்பு:*இந்நிகழ்ச்சியில் புள்ளியியல் துறை ஆய்வாளர் ரமேஷ், தலைமைக்காவலர் கற்பக லட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளைப் பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியர்கள் முகமது ரபி மற்றும் அல்ஹாஜ் முகமது ஆகியோர் மிக நேர்த்தியாகச் செய்திருந்தனர்.*சக்கர வியூகம் வாய்ஸ்:*பள்ளிப் பருவத்திலேயே மாணவர்களிடையே சமூக நீதி, மனித உரிமைகள் மற்றும் சமூக நல்லிணக்கம் குறித்த விழிப்புணர்வை மதுரை மாநகர காவல்துறை அமுல்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க, பாராட்டுக்குரிய செயலாகும். எனினும், இத்தகைய விழிப்புணர்வுப் பேச்சுகள் வெறும் ஒருநாள் கூட்டத்தோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. பள்ளிகளின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் போதைப்பொருள் நடமாட்டத்தைத் தடுக்கக் காவல்துறை தொடர்ந்து கறாரான சோதனைகளை நடத்த வேண்டும். அத்துடன், மாணவர்களின் எதிர்காலச் சீரழிவுக்குக் காரணமான இணையவழி ஆபத்துகள் குறித்துப் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.



## அலங்காநல்லூரில் விசிக சார்பில் இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை புதிய பொறுப்பாளர்கள் நியமனம்

அலங்காநல்லூர், ஜூன்.16-
மதுரைமாவட்டம் அலங்காநல்லூர் கேட்கடை தனியார் மண்டபத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறையின் புதிய பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம் நடைபெற்றது. இதில் இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாநில செயலாளர் ஊர்சேரி சிந்தனைவளவன், தலைமை தாங்கினார். விசிக துணைப் பொதுச் செயலாளர் வே.கனியமுதன், கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.முன்னதாக புதிய பொறுப்பாளர்களுக்கு கட்சியின் நிர்வாகிகள் கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டனர். இதில் மாவட்ட, ஒன்றிய, நகர கிளைக் கழக தொகுதி,பொறுப்பாளர்கள் நியமனம் செய்வது கட்சியின் தலைவர் திருமாவளவனுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. கூட்டணியில் சமூகநீதித்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள வன்னியரக்கு வாழ்த்துக்களையும் நன்றி தெரிவிக்கப்பட்டது. வரும் ஜூன்18முடக்காத்தான் பாண்டி நினைவு நாள் மற்றும் ஜூன் 30மேலவளவு போராளிகள் நினைவு நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும் தலைவர் தொல் திருமாவளவன், அவர்களை இளஞ் சிறுத்தை எழுச்சி பாசறை சார்பில் நிர்வாகிகள் 25க்கு மேற்பட்ட வாகனங்களில் சென்று உற்சாக வரவேற்பு கொடுப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிகழ்ச்சி முடிவில் பேரூர் செயலாளர் ராமதாஸ் நன்றி கூறினார்.

## வானிலை முன்னறிவிப்பு: தேனி மாவட்டத்தில் கனமழை வாய்ப்பு



சென்னை, ஜூன்.16-
தமிழகத்தில் (ஜூன் 16) சில மாவட்டங்களில் மிதமான மழையும், தேனி மாவட்டத்தில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகம் நோக்கி வீசும் மேற்கு திசை காற்றின் வேகம் மாறுபாடு காரணமாக தமிழகத்தில் நாளை (ஜூன் 16), மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், நாமக்கல், சேலம், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.
தேனி மாவட்டத்தில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.17, 18 தேதிகளில் தமிழகத்தில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், ராமநாதபுரம், மதுரை, மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழையும் 19 முதல் 21ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை நாளை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் அளவு வரை உயரக்கூடும். 17 முதல் 19ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 93 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.
தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 18ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக கடலூர் மாவட்டம் கொத்தவாச்சேரியில் 7 செமீ, கடலூர் மாவட்டம் வேப்பூர், சேத்தியாத்தோப்பு, குறிஞ்சிப்பாடியில் தலா 6 செமீ, காட்டுமயிலூர், குப்பநத்தம், கள்ளக்குறிச்சி மாவட்டம் கீழ்படி ஆகிய இடங்களில் தலா 5 செமீ மழை பதிவாகியுள்ளது.



## நீலகிரி மாவட்டத்தில் அறிவிக்கப்படாத மின்தடை பொதுமக்கள் அவதி

நீலகிரி, ஜூன்.16-
நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக அடிக்கடி ஏற்படும் மின்தடையால், பொதுமக்கள் அவதியடைந்து வருகின்றனர்.நீலகிரி மாவட்டத்தில் மலைகளுக்கு நடுவே அணை கட்டி நீரை தேக்கி நீர்மின் உற்பத்தி செய்யப்படுகிறது. குந்தா நீர்மின் திட்டத்தின் கீழ் உள்ள 12 மின் நிலையங்கள் மூலம் 845 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.இங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஈரோடு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து தமிழ்நாடு முழுவதும் விநியோகம் செய்யப்படுகிறது. தமிழகத்தில் மின்தேவை அதிகம் இருக்கும் போது இங்குள்ள நீர்மின் நிலையங்கள் முழு வீச்சில் இயக்கப்பட்டு மின் உற்பத்தி செய்யப்படும். பீக் அவர்ஸ் இல்லாத சமயங்களில் தேவைக்கேற்ப மின் உற்பத்தி நடைபெறும். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழிற்சாலைகளை தவிர பெரிய அளவிலான தொழிற்சாலைகள் இல்லை. இதனால், மாவட்டம் முழுவதிலும் அதிகளவில் மின்சாரம் பயன்படுத்தப்படுவதில்லை. நீலகிரி மாவட்டத்திற்கு 70 மெகாவாட் மின்சதரம் மட்டுமே தேவை. இதனால் மின் பற்றாகுறை என்பது கிடையாது.பருவமழை சமயங்களில் மரங்கள் விழுதல், மின் கம்பிகள் துண்டிப்பு போன்ற சமயங்களில் மட்டுமே மின்தடை ஏற்படும். ஆனால், நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஒரு மாதமாக அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது. இதில், 10 நிமிடம் முதல் 1 மணி நேரத்திற்கும் மேல் வரை மின்தடை ஏற்படுகிறது. நேற்று ஊட்டி நகரில் சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக மின்தடை ஏற்பட்டது. மாவட்டம் முழுவதும் இதே நிலை நீடிக்கிறது. இதனால் வர்த்தக நிறுவனங்கள், பள்ளிகள், வங்கிகள், மருத்துவமனைகள், குடியிருப்பு பகுதிகளில் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டன. அடிக்கடி மின்தடை ஏற்படுவது தமிழக அரசு மீது பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

## “உண்மைத் தொண்டர்களை எதிரிகளாகப் பார்க்கும் தலைமை” இபிஎஸ் மீது சி.விஜயபாஸ்கர் சாடல்

சென்னை, ஜூன்.16-
அதிமுகவில் உட்கட்சி பூசல் நிலவி வரும் நிலையில், “உழைக்கும் உண்மைத் தொண்டர்களை எதிரிகளாகப் பார்க்கும் தலைமை” என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை, முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் கடுமையாக சாடியுள்ளார்.
2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கு பிறகு, அதிமுகவில் உட்கட்சி பூசல் தீவிரமடைந்தது. அதாவது, எடப்பாடி பழனிசாமி மற்றும் சி.வி.சண்முகம் தலைமையில் என இரண்டு அணிகள் உருவாகின. இதையடுத்து, அதிமுகவிலிருந்து சில எம்.எல்.ஏக்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, தவெக கட்சியில் இணைந்தது அதிமுகவுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.இந்தச் சூழலில், சி.விஜயபாஸ்கரும் தவெகவில் இணையப் போவதாகப் பேச்சுக்கள் அடிபட்டன. இந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், அவரின் இந்தப் பதிவு, கட்சிக்குள் நிலவும் புகைச்சலை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.
இது குறித்து சி.விஜயபாஸ்கர் தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், “உழைக்கும் உண்மைத் தொண்டர்களை எதிரிகளாகப் பார்க்கும் தலைமையும், கேள்வி கேட்பதையே குற்றமாகப் பார்க்கும் அரசியலும் ‘வெற்றிக்கான பாதை அல்ல.’
வரலாறு நினைவில் வைத்திருப்பது, எத்தனை பேரை நீக்கினோம் என்பதை அல்லஞ் எத்தனை பேரை ஒன்றிணைத்தோம், எத்தனைக் களங்களை வென்றெடுத்தோம் என்பதைத்தான்” என்று குறிப்பிட்டுள்ளார்.



# 10th பொதுத்தேர்வில் சாதனை படைத்த மாணவிகளுக்குக் கிராம மக்கள் சார்பில் பம்பர் ரொக்கப் பரிசு!

மதுரை, ஜூன்.16-
மதுரை மாவட்டம் பாலமேடு அருகே உள்ள சேந்தமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியில், 202526 ஆம் கல்வியாண்டு பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் சாதனை படைத்த மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.
* மாணவிகளுக்கு அள்ளிக்கொடுத்த கிராம மக்கள்:*இப்பள்ளியில் பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவிகளுக்குக் கிராமப் பொதுமக்கள் மற்றும் பள்ளியின் சார்பில் கூட்டுப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதில் ஊர் மக்கள் சார்பில் முதல் பரிசாக ரூ. 5000த்தினை மாணவி லட்சுமியும், இரண்டாம் பரிசாக ரூ. 4000த்தினை மாணவி பூர்ணிமாவும், மூன்றாம் பரிசாக ரூ. 3000த்தினை மற்றொரு மாணவி லட்சுமியும் பெற்றுக்கொண்டனர்.*ஆசிரியர்களுக்குக் கேடயம் வழங்கி கௌரவிப்பு:*தொடர்ந்து பள்ளியின் சார்பில் சாதனை படைத்த இந்த மூன்று மாணவிகளுக்கும் சிறப்புப் பரிசுகளும், நினைவுப் கேடயங்களும் வழங்கப்பட்டன. மேலும், நடப்பு கல்வியாண்டில் பள்ளிக்கு 100% தேர்ச்சியைப் பெற்றுத் தந்து பெருமை சேர்த்த பள்ளி ஆசிரியர்களுக்கும் கிராம மக்கள் சார்பில் கேடயம் வழங்கி சிறப்பு கௌரவம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் கிராம பொதுமக்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டனர்.

# சென்னையில் நல்லகண்ணுவுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டும்: அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற கூட்டத்தில் தீர்மானம்



சென்னை, ஜூன்.16-
சென்னையில் நல்லகண்ணுவுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலக்குழு வலியுறுத்தி உள்ளது.
அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநிலக்குழு கூட்டம் தி.நகரில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் கே.பாரதி, மாநில தலைவர் இரா. தமிழ்ப்பெருமாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
மறைந்த மூத்த தலைவர் நல்லகண்ணுவின் போராட்ட வரலாற்றையும், தியாகத்தையும் எடுத்துச் சொல்லும்விதமாக சென்னையில் அவருக்கு தமிழக அரசு மணிமண்டபம் அமைக்க வேண்டும். மேகேதாட்டு அணை திட்டத்தை கர்நாடக அரசு முற்றிலுமாக கைவிட வேண்டும்.பாலியல் வன்கொடுமை குற்றங்களில் ஈடுபடுவோர் மீது தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களிலும் பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.
தனிச் சட்டம்பள்ளி, கல்லூரி வளாகங்களுக்கு அருகே போதைப்பொருள் கஞ்சா மற்றும் தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை காவல் துறை முழுமையாக கண்காணிக்க வேண்டும்.
சாதிய படுகொலைகளை தடுக்க தனிச் சட்டத்தை தமிழக அரசு உடனே இயற்ற முன்வர வேண்டும் என்பன உள்பட 8 தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.
மேலும், பாலியல் வன்கொடுமை, போதை கலாச்சாரம், ஊழல் இல்லாத, சாதி மதவெறியற்ற தமிழகத்தை உருவாக்குவோம் என்ற வகையில் 1 கோடி பேர் கையெழுத்திடும் இயக்கம் ஜூலை 5 முதல் 25ம் தேதி வரை 5 ஆயிரம் இடங்களில் நடத்தவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# சமீப காலமாக தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் வேதனை அளிக்கிறது: இயக்குநர் பா.ரஞ்சித்

சென்னை, ஜூன்.16-
"சமீப காலமாக தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் வேதனை அளிக்கிறது. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு இணைய வழி பாலியல் சுரண்டல், இணைய மிரட்டல் குறித்து தொடர்ச்சியான விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்" என திரைப்பட இயக்குநர் பா.ரஞ்சித் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்

# பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் பிரிவு மாணவர்கள் சென்னை அரசு கல்லூரி விடுதிகளில் சேர விண்ணப்பங்கள் வரவேற்பு



சென்னை, ஜூன்.16-
சென்னை மாவட்டத்தில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்கள், அரசு கல்லூரி விடுதிகளில் சேர விண்ணப்பிக்கலாம் என, மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.இதுதொடர்பாக, அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னை மாவட்டத்தில், தமிழக அரசின் சார்பில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியருக்கு 12 அரசு கல்லூரி மாணவர் விடுதிகள், 6 அரசு கல்லூரி மாணவியர் விடுதிகள் என மொத்தம் 18 அரசு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள், பட்டமேற்படிப்புகள், ஐடிஐ, பாலிடெக்னிக் போன்ற படிப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் இந்த விடுதிகளில் தங்கி படிக்கலாம்.
விடுதிக்கு எவ்வித கட்டணமும் இல்லை.அதேபோல், முகாம்வாழ் இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்கு என தனியே 5 இடங்கள் சிறப்பு ஒதுக்கீடாக ஏற்படுத் தப்பட்டுள்ளன. விடுதிகளில் சேர விரும்பும் மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும்.மாணவர்களின் இருப்பிடத்தில் இருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கிமீ தூரத்துக்கு மேல் இருக்க வேண்டும். தகுதியுடைய மாணவ, மாணவியர் சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர் அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் இருந்து விண்ணப்பங்களை பெற்று, பூர்த்தி செய்து, உரிய விடுதி காப்பாளர் அல்லது மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் வரும் ஜூலை 15ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ் போன்றவற்றை இணைக்க தேவையில்லை. விடுதியில் சேரும் போது சான்றிதழ்களை அளித்தால் போதுமானது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கும்மிடிப்பூண்டியில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான 3 வயது குழந்தை உயிரிழப்பு வடமாநில இளைஞர் கைது



திருவள்ளூர், ஜூன்.16-
கும்மிடிப்பூண்டி பகுதியில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான 3 வயது பெண் குழந்தை உயிரிழந்த சம்பவம், பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கொடூரச் சம்பவம் தொடர்பாக வடமாநில இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்ட நிலையில், மேலும் 3 பேரை கைது செய்யக் கோரி வடமாநில தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் பகுதியில் 300க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் ஆயிரக்கணக்கில் பணிபுரிந்து வரும் பிஹார், ஒடிசா, ஜார்க்கண்ட் உள்ளிட்ட வடமாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள், கும்மிடிப்பூண்டி சிப்காட் மற்றும் அதனையொட்டியுள்ள பகுதிகளில் குடும்பத்துடன் வாடகை வீடுகளில் தங்கியுள்ளனர். இந்நிலையில், கும்மிடிப்பூண்டி சிப்காட் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை, வடமாநில தம்பதியின் 3 வயது பெண் குழந்தை காணாமல் போனது தெரிய வந்தது. இதனால், அதிர்ச்சியடைந்த பெற்றோர், பொதுமக்கள் உதவியுடன் அந்தப் பகுதியில் குழந்தையை தேடினர்.அப்போது, 3 வயது பெண் குழந்தை, பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக் கப்பட்டு முட்புதரில் வீசப்பட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து, காயங்களுடன் கிடந்த குழந்தையை, பெற்றோர் மீட்டு சிகிச்சைக்காக கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்ற குழந்தை, மேல் சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், இன்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தது.இதுகுறித்து, வழக்குப் பதிவு செய்த கும்மிடிப்பூண்டி சிப்காட் போலீஸார், குழந்தை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு, உயிரிழந்தது தொடர்பாக பிஹாரைச் சேர்ந்த பிபின் மஞ்சி (19) என்ற இளைஞர் கைது செய்துள்ளனர். இந்நிலையில், 'குழந்தையை புலம்பெயர் தொழிலாளர்கள் 4 பேர் கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். ஆகவே, இச்சம்பவம் தொடர்பாக மேலும் 3 பேரை கைது செய்ய வேண்டும்' என்று கோரி இன்று கும்மிடிப்பூண்டி சிப்காட் காவல் நிலையம் எதிரில் வடமாநில தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் போலீஸார், 'உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படும்' என உறுதியளித்தனர். பின்னர், சுமார் 2 மணி நேரத்துக்கு மேல் நடைபெற்ற போராட்டம் முடிவுக்கு வந்தது

# மூடப்பட்டிருந்த டாஸ்மாக் பாரில் தண்ணீர் பாட்டில் கேட்டு ரகளையில் ஈடுபட்ட தவெகவினர் கைது

திருப்பூர், ஜூன்.16-
திருப்பூர் மாவட்டம் ஊதியூர் அருகே மூடப்பட்டிருந்த டாஸ்மாக் பாரில் தண்ணீர் பாட்டில் கேட்டு ரகளையில் ஈடுபட்ட தவெக நிர்வாகிகள், நியாயம் கேட்ட பார் உரிமையாளரை சரமாரியாக கத்தியால் குத்தியதில் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் தற்போது போலீசார் தவெக நிர்வாகிகள் 4 பேரை கைது செய்துள்ளனர். தவெக ஆட்சி அமைத்தவுடன் பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கக்கூடிய அரசு டாஸ்மாக் கடை மற்றும் பார்கள் மூடப்பட்டன. அந்த வகையில் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் ஊதியூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் அரசு டாஸ்மாக் பாரானது கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக மூடப்பட்டது. தற்போது கடையில் உள்ள கேமரா, டேபிள் உள்ளிட்டபொருட்கள் திருடபடாமல் இருப்பதற்காக பாதுகாப்பு பணியில் ஒரு பாதுகாவலர் இருந்து வந்துள்ளார். இந்நிலையில் அப்பகுதியை சேர்ந்த தவெக நிர்வாகிகள் கார்த்திக், முத்துக்குமார், வலுப்பூரான், பிரகாஷ் ஆகிய நான்கு பேர் மது போதையில் இந்த பகுதியில் மூடப்பட்டிருந்த பாருக்கு சென்றுள்ளார். அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பாதுகாவலரிடம் தண்ணீர் பாட்டில் கேட்டு ரகளையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.
இது குறித்து பார் நடத்துனர் மருதமுத்துவிற்கு பாதுகாவளர் கொடுத்த தகவலினால் அவர் அங்கு வந்து நியாயம் கேட்டார். அப்பொழுது போதையில் இருந்த தவெக நிர்வாகிகள் அவரை சரமாரியாக கத்தியில் தாக்கி தப்பி சென்றனர். இதில் வயிறு மற்றும் நுரையீரல் உள்ளிட்ட இடங்களில் பலத்த காயமடைந்து ரத்த வெள்ளத்தில் மயங்கி விழுந்தவரை பாதுகாவலர் கொடுத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த ஆம்புலன்ஸ் மூலம் மருதமுத்து தனியார் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். தற்போது அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டுவருகிறது. இதனிடையே ஊதியூர் பகுதியில் ஒரு வீட்டில் பதுங்கி இருந்த தவெக நிர்வாகிகள் 4 போரையும் போலீசார் கைது செய்தனர்

# கும்மிடிப்பூண்டியில் 3 வயது குழந்தை வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்டதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கண்டனம்

சென்னை, ஜூன்.16-
கும்மிடிப்பூண்டியில் 3 வயது குழந்தை வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்டதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கண்டனம் தெரிவித்துள்ளது. "குழந்தை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழகத்தையே உலுக்கியுள்ளது. பெண்கள், குழந்தைகள் மீதான வன்கொடுமை கொடூர செயலை வன்மையாக கண்டிக்கிறோம். காவல்துறை தீர விசாரித்து குற்றமிழைத்த அனைவரையும் கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வலியுறுத்தியுள்ளது

# அஜித்குமார் கொலை வழக்கில் சஸ்பென்ட் ஆன நால்வருக்கு முன்ஜாமின்

மதுரை, ஜூன்.16-
மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் சஸ்பென்ட் ஆன மானாமதுரை டி.எஸ்.பி. சண்முக சுந்தரம், திருப்புவனம் ஆய்வாளர் ரமேஸ் குமார், எஸ்.ஐ, சிவக்குமார், தலைமைக் காவலர் இளையராஜா ஆகிய நால்வருக்கும் முன்ஜாமின் வழங்கி உயர் நீதிமன்றக் கிளை உத்தரவிட்டுள்ளது. சிபிஐ விசாரித்து வரும் இவ்வழக்கில் விசாரணைக்கு நால்வரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்

# ரேபிஸ் நோயால் பாதிக்கப்பட்ட பீகார் தொழிலாளி உயிரிழப்பு



ஈரோடு, ஜூன்.16-
பவானி அருகே காடையம்பட்டியில் ரேபிஸ் நோயால் பாதிக்கப்பட்ட பீகார் தொழிலாளி உயிரிழந்தார். பீகாரில் இருந்தபோது தெருநாய் கடித்த நிலையில் தடுப்பூசி போடாமல் அப்ரஜித் இருந்ததாக கூறப்படுகிறது. காடையம்பட்டியில் கடந்த 2 நாட்களுக்கு முன் பீகார் தொழிலாளி அப்ரஜித் க்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பரிசோதனை செய்தபோது அப்ரஜித்க்கு ரேபிஸ் தொற்று இருந்தது தெரிய வந்தது. ரேபிஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் பீகார் தொழிலாளி அப்ரஜித் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.



# தமிழ்நாடு முழுவதும் ஜூன் 22ம் தேதி விவசாயிகள் உண்ணாவிரதம் மற்றும் காத்திருப்பு போராட்டம்

சென்னை, ஜூன்.16-
தமிழ்நாடு முழுவதும் ஜூன் 22ம் தேதி விவசாயிகள் உண்ணாவிரதம் மற்றும் காத்திருப்பு போராட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளனர். விவசாயிகளின் பயிர்க்கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் நடத்த உள்ளனர். முதலமைச்சர் விஜய் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வலியுறுத்தி விவசாயிகள் போராட்டம் அறிவித்துள்ளனர்

# குடித்து விட்டு வாகனங்கள் ஓட்டுவது தொடர்பாக தினமும் கண்டிப்பாக 10 வழக்குகள் பதிய வேண்டும்: உயரதிகாரி வாய்மொழி உத்தரவால் போலீசார் கடும் மன உளைச்சல் டி.டி. கருவியுடன் சாலையில் அலையும் அவலம்



தண்டையார்பேட்டை, ஜூன்.16-
போக்குவரத்து போலீசாரின் முதன்மை கடமை பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதும், சாலைகளில் வாகனங்கள் தடையின்றி செல்வதை முறைப்படுத்துவதுமாகும். மேலும், சிக்னலை சரி பார்ப்பது, ஹெல்மெட் அணியாமலும், லைசன்ஸ், இன்சூரன்ஸ் இல்லாமலும் செல்பவர்கள், வேகமாக வண்டியை ஓட்டி செல்பவர்கள், ரேஸ் ஓட்டுபவர்கள் பேபின்றோர்களை பிடித்து சட்டப்படி நடவடிக்கை எடுப்பது, முதியவர்கள், குழந்தைகள் மற்றும் பாதசாரிகள் சாலையை கடக்க உதவி செய்வதும் அடங்கும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், சென்னை முழுவதும் போக்குவரத்து இன்ஸ்பெக்டர்கள், எஸ்ஐக்கள், சிறப்பு எஸ்ஐக்கள் மற்றும் போலீசாருக்கு உயரதிகாரிகளால் ஒரு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதாவது, குடித்து விட்டு வாகனம் ஓட்டுவது தொடர்பாக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் தினமும் 10 வழக்குகளாவது பதிவு செய்து அபராதம் விதிக்க வேண்டும். ஒரு நபருக்கு ரூ.10 ஆயிரம் என்றால் 10 வழக்கு பதிவு செய்யப்படும்போது ரூ.1 லட்சம் வசூலாகிறது. இதே போன்று சென்னை முழுவதும் வசூலிக்கப்பட்டால் பல கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும்' என்பதுதான் இந்த உத்தரவின் நோக்கமாக உள்ளது என்று கூறப்படுகிறது.
எதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என விசாரித்தபோது, தற்போது தமிழக அரசின் உத்தரவுபடி 717 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளது. அந்த வருமானத்தை ஈடுகட்டும் விதமாகத்தான் இந்த நடவடிக்கை என்று கூறப்படுகிறது. அப்படி இருக்கையில் வடசென்னையை பொருத்தவரை நடுத்தர மக்கள், ஏழை மக்கள் அதிகம் வசிக்கிறார்கள். வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை, காசிமேடு, ராயபுரம், கொருக்குப்பேட்டை, மண்ணடி, முத்தியால்பேட்டை, யானை கவுனி, பூக்கடை உள்ளிட்ட பகுதிகளில் போலீசார் தணிக்கை செய்து அபராத தொகையை கட்ட முடியாதவர்களை இருசக்கர வாகனத்தை அடாவடியாக பறிமுதல் செய்கின்றனர். இதனால் அவர்கள் வேலைக்கு செல்ல வாகனம் இல்லாமல் அவதிக்குள்ளாகிறார்கள். அதே நேரத்தில் உயரதிகாரியின் இந்த நடவடிக்கை போலீசாருக்கு கடும் மன உளைச்சலை ஏற்படுத்துகிறது. அதாவது, இன்ஸ்பெக்டர்கள், எஸ்ஐக்கள், 24 மணி நேரமும் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுபவர்களை பிடிப்பதற்காக டி.டி. கருவியை கையில் வைத்து கொண்டு சாலையில் அலைகிறார்கள். சில நேரங்களில், பரிசோதனை செய்யும்போது வேகமாக வாகனங்களில் வருபவர்கள் கீழே விழுந்து விபத்தில் சிக்குகின்றனர். இதற்கு, 'நீங்கள்தான் காரணம்' என போலீசார் மீது பழிபோட்டு உயரதிகாரிகளால் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதோடு மட்டுமல்லாமல், 'சிலர் போதையில் போலீசார் மீது வாகனத்தை இடித்து விட்டு தப்பி செல்கிறார்கள். இதில் பாதிக்கப்படுவது போலீசார்தான். இதை உயரதிகாரிகள் கண்டு கொள்வதில்லை என போலீசார் குமுறுகின்றனர். மன உளைச்சலில் நொந்து கொள்கிறார்கள். உடனடியாக உயரதிகாரிகள், இந்த நடவடிக்கையை கைவிட வேண்டும். இல்லையென்றால் போலீசார் விபரீத முடிவுகளை எடுக்க வாய்ப்பு உள்ளது. ஒருபுறம் அரசே மதுபானத்தை விற்பனை செய்துவிட்டு மறுபுறம் குடித்து விட்டு வருபவர்களை பிடிப்பது என்பது எந்த விதத்தில் நியாயம் என்று பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும் குற்றம் சாட்டுகிறார்கள். இதனால் தமிழக அரசு மீது பொதுமக்களுக்கு கோபத்தை ஏற்படுத்துகிறது. போலீசாரும் விரக்தியில் உள்ளனர்



# “மக்களின் வாழ்வாதாரமே முக்கியம்!” 8 அமைச்சர்களைத் தேடித்தேடி மனு அளித்த ராதாபுரம் எம்எல்ஏ சதீஷ் கிறிஸ்டோபர்!

சென்னை, ஜூன்.16-
ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி மக்களின் நீண்டநாள் தேவைகள் மற்றும் வாழ்வாதாரக் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை, ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சதீஷ் கிறிஸ்டோபர், சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக அமைச்சர்களை நேரில் சந்தித்து, அவரவர் துறை சார்ந்த கோரிக்கைகளைத் தனித்தனியாக வழங்கி விரிவாகப் பேசினார்.*சுகாதாரம், மின்சாரம் மற்றும் கல்வி மேம்பாடு:*அதன்படி, சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் கே.ஜி. அருண்ராஜ் அவர்களிடம் தொகுதி மருத்துவமனை வசதிகள் குறித்தும், மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார் அவர்களிடம் மின் கட்டமைப்பு வசதிகள் குறித்தும், பள்ளி கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ் மோகன் அவர்களிடம் பள்ளி உள்கட்டமைப்புகள் குறித்தும் மனுக்களை வழங்கினார்.*போக்குவரத்து, விவசாயம் மற்றும் நிதி ஒதுக்கீடு:*மேலும், போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் அவர்களிடம் புதிய பேருந்து வழித்தடங்கள் குறித்தும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் வினோத் அவர்களிடம் விவசாயிகளின் நலத்திட்டங்கள் குறித்தும், நிதி மற்றும் திட்ட வளர்ச்சித் துறை அமைச்சர் மரிய வில்சன் அவர்களிடம் தொகுதி நிதி ஒதுக்கீடுகள் குறித்தும் விவாதித்தார்.*கால்நடை மற்றும் கடலோரப் பாதுகாப்பு:*தொடர்ந்து, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கமலி அவர்களிடம் கால்நடை மருத்துவ வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் ராஜீவ் அவர்களிடம் கடலோரப் பாதுகாப்பு குறித்த மனுக்களையும் வழங்கி, ராதாபுரம் தொகுதியின் ஒட்டுமொத்த உள்கட்டமைப்பைப் போர்க்கால அடிப்படையில் மேம்படுத்தக் கறாரான கோரிக்கைகளை முன்வைத்தார்.

# ஆகஸ்டில் மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்!” தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கம் பிரகடனம்!




மதுரை, ஜூன்.16-
தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மதுரை மேற்கு வட்டக்கிளையின் 11வது ஆண்டுப் பேரவைக் கூட்டம், அரபிந்தோ மீரா மெட்ரிகுலேஷன் பள்ளி கூட்ட அரங்கில் கிளைத் தலைவர் கே. நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. வட்டத்துணைத் தலைவர் டி. சோமசேகர் அஞ்சலி தீர்மானத்தை வாசிக்க, இணைச்செயலாளர் எம். கே. பாஸ்கரன் வரவேற்புரையாற்றினார். மாவட்டத் துணைத் தலைவர் பி. மணிவண்ணன் பேரவையைத் துவக்கி வைத்தார். கிளைச் செயலாளர் டி. முருகன் செயலாளர் அறிக்கையையும், பொறியாளர் எஸ். பாலசுப்ரமணியன் பொருளாளர் அறிக்கையையும் சமர்ப்பித்து ஒருமனதாக ஒப்புதல் பெற்றனர். தொடர்ந்து துணைத் தலைவர்கள் முத்துராமலிங்கம், பொறியாளர் பாரதி, இணைச்செயலாளர் மாரியம்மாள் ஆகியோர் கோரிக்கை தீர்மானங்களை நிறைவேற்றினர். இப்பேரவையில் மாவட்டச் செயலாளர் அ. பால்முருகன், மாநிலச்செயலாளர் முனைவர் சு. கிருஷ்ணன் மற்றும் அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் ஆ. செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்டத் தலைவர் எம். பரமேஸ்வரன் சிறப்புரையாற்றினார். பேரவையின் நிறைவாக, மாநிலத் தலைவர் என். ஜெயச்சந்திரன் சிறப்பு நிறைவுரையாற்றுகையில், "ஓய்வூதியர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் ஆகஸ்ட் மாதத்தில் தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் பிரம்மாண்ட ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்" எனப் பிரகடனம் செய்தார். மேலும், பேரவையில் பங்கேற்ற 75 ஓய்வூதியர்களில், 75 வயதைக் கடந்த 24 மூத்த ஓய்வூதியர்களுக்கு மாநிலத் தலைவர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். வட்ட இணைச்செயலாளர் முத்துக்கிருஷ்ணன் நன்றி கூறினார்.

# “திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்தை தாலுகா மருத்துவமனையாக தரம் உயர்த்துக!” காங்கிரஸ் கோரிக்கை!



நெல்லை, ஜூன்.16-
திசையன்விளை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தக் கோரி, நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் தமிழக நிதி அமைச்சரிடம் முக்கியக் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.
*எம்பி மூலம் அமைச்சருக்குப் பறந்த மனு:*ராதாபுரம் தொகுதி காங்கிரஸ் பொறுப்பாளர் விவேக் முருகன், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் ப்ரூஸ் மூலம் தமிழக நிதி அமைச்சர் மரிய வில்சனிடம் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது: தாலுகா தலைநகரமான திசையன்விளை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களைச் சேர்ந்த சுமார் 80 ஆயிரம் பொதுமக்கள் இங்குள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தையே நம்பியுள்ளனர். இங்கு வெளி நோயாளிகளாகத் தினமும் 400க்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று வரும் நிலையில், இளநிலை மருத்துவர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். இதனால், அவசரச் சிகிச்சைக்காக வரும் நோயாளிகள் மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் நாங்குநேரி மற்றும் நெல்லை அரசு மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்படுகின்றனர். இதனால் ஏழை மக்களுக்கு வீண் செலவும், கால விரயமும் ஏற்படுவதோடு, கடற்கரைப் பகுதி நோயாளிகள் தனியார் மருத்துவமனைகளை நாடிப் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே, இம்மையத்தைத் தாலுகா அரசு மருத்துவமனையாக உடனடியாகத் தரம் உயர்த்தி, நவீனப் பரிசோதனை வசதிகள், சிறப்பு மருத்துவர்கள், கூடுதல் செவிலியர்கள் மற்றும் பணியாளர்களை நியமிக்க வேண்டும். அத்துடன், கூடுதலாக ஒரு புதிய 108 ஆம்புலன்ஸ் வாகனத்தையும் உடனடியாக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என அந்த மனுவில் கறாராக வலியுறுத்தப்பட்டுள்ளது.



■ திசையன்விளை பேரூராட்சி காவல் நிலையம் ஹைவேஸ் ரோடு பகுதியில் உள்ள பழுதடைந்த உயர் கோபுர விளக்கினை திசையன்விளை பேரூராட்சி மன்ற தலைவி ஜான்சி ராணி பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று பொதுமக்கள் பாதுகாப்பு நலன் கருதி உயர் கோபுர விளக்கினை பழுது பார்த்து மீண்டும் ஒளிர வைத்தார்.



# “அதிமுகவின் கோட்டையை அசைக்க முடியாது!” ராதாபுரம் கிழக்கு ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் முழக்கம்!

நெல்லை, ஜூன்.16-
நெல்லை மாவட்டம் ராதாபுரம் கிழக்கு ஒன்றிய அதிமுக செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் இடையன்குடியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் திருநெல்வேலி புறநகர் மாவட்டச் செயலாளர் மருதூர் .ராமசுப்பிரமணியன் தலைமை தாங்கினார்.
ராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி.கே. செல்வராஜ் வரவேற்றுப் பேசினார். இந்நிகழ்வில் மாநில எம்.ஜி.ஆர் மன்றத் துணைச் செயலாளர் நாராயண பெருமாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சௌந்தர்ராஜன், திசையன்விளை பேரூராட்சித் தலைவரும் மாவட்டக் கழக இணைச் செயலாளருமான ஜான்சிராணி மற்றும் ராதாபுரம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அந்தோணி அமல ராஜா ஆகியோர் முன்னிலை வகித்துச் சிறப்புரையாற்றினர். மேலும், திசையன்விளை போரூர் கழகச் செயலாளரும் பேரூராட்சித் துணைத் தலைவருமான வி.பி.ஜெயக்குமார், மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் உவரி ராஜன் கிருபாநிதி, உவரி பவர்சிங் ஆசிரியர், ஒன்றிய அம்மா பேரவைச் செயலாளர் உவரி ரமேஷ் மற்றும் மாவட்டத் துணைச் செயலாளர் ராம்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.
இவர்களுடன் மாவட்ட வழக்கறிஞர் பிரிவு நவீன் முத்து சரவணன், புறநகர் இளைஞர் மற்றும் இளம்பெண் பாசறை ஷ்யாம், மாணவர் அணி சபரி அஸ்வின், இளைஞரணி சபரி நவீன், தகவல் தொழில்நுட்பப் பிரிவு முடவன் குளம் சுப்பிரமணியன், வர்த்தக அணி ஜமீன் பாரதிராஜா, வர்த்தகப் பிரமுகர் முருகன், லெனின் கிளாஸ்டர், தினகர், பிரகாஷ் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான நிர்வாகிகள் ஒருமனதாகத் திரண்டு பங்கேற்றனர்.



# கடையநல்லூர் சட்டமன்ற அலுவலகத்தை துரை வைகோ எம்பி திறந்து வைத்தார்

தென்காசி, ஜூன்.16-
தென்காசி முன்னாள் வடக்கு மாவட்ட செயலாளர் செல்லத்துரை விளக்கேற்றி வைத்தார். நிகழ்ச்சியில் கடையநல்லூர் எம்எல்ஏ திமு ராஜேந்திரன், தென்காசி மதிமுக மாவட்டச் செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், சுப்பையா, மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக சார்பில் மாவட்ட பொறுப்பாளர் பாசித், கடையநல்லூர் திமுக நகர செயலாளர் இத்தாலின் பீரப்பா, அப்பாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




■ திருநெல்வேலியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சௌந்தரராஜன், ஆர்.ஆர் ஹோட்டலில் நடைபெற்ற மக்கள் சேவை மைய புதிய நிர்வாகிகள்பொறுப்பேற்ப்பு நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார் .

# மதுரை மாநகர தெற்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளராக அ.தங்கமணி பொறுப்பேற்றுக் கொண்டார்

மதுரை, ஜூன்.16-
மதுரை மாநகர தெற்கு போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளராக அ.தங்கமணி பொறுப்பேற்றுக் கொண்டார்.



இதற்கு முன்பாக மதுரை வடக்கு போக்குவரத்து காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது, மதுரை மாநகரில் அதிக அளவு போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு பல்வேறு விழிப்புணர்வு பேரணி மற்றும் பதாகைகள் வழங்கி பள்ளி மாணவ மாணவிகளுக்கு நேரடியாக விழிப்புணர்வு செய்தது குறிப்பிடத்தக்கது.

# கீமோதெரபி மருந்துகள் எளிதில் கிடைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, ஜூன்.16-
பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை: நாடு முழுவதும் புற்றுநோய் சிகிச்சைக்கு கீமோதெரபி மருந்துகளான சிஸ்பிளாட்டின் மற்றும் கார்போபிளாட்டின் ஆகியவற்றிற்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது கவலைக்குரிய ஒன்றாகும்.இந்த தட்டுப்பாட்டை சமாளிப்பதற்காக, மருந்து தயாரிப்பு நிறுவனங்களுக்கு விலை உயர்வுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பது, மருந்து தட்டுப்பாடு என்பது உண்மையான பிரச்சினை என்பதை அரசே ஒப்புக்கொடிருப்பதை காட்டுகிறது.இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் அரசு மருத் துவமனைகளையே நம்பி சிகிச்சை பெற்று வருகின்றனர். பல குடும்பங்கள் சிகிச்சை செலவுகளால் கடன் சுமையில் சிக்குகின்றன.இந்நிலையில், கீமோதெரபி மருந்துகளின் விலை உயர்வு நோயாளிகளுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் கூடுதல் பொருளாதார சுமையை ஏற்படுத்தும்.
புற்றுநோய் என்பது ஒரு குடும்பத்தின் பொருளாதாரத்தையும், மன நிலையையும் கடுமையாக பாதிக்கும் நோயாகும்.
எனவே, ஏழை மக்களுக்கு சிகிச்சை பாதிக்கப்படாத வகையில், கீமோதெரபி மருந்துகள் எளிதில் கிடைக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்




■ தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறையின் மூலம் முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தின உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., ஏற்றுக் கொள்ள அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து, முதியோர்களுக்கெதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஓவியப் போட்டி மற்றும் பேச்சுப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ, மாணவியர்களை பாராட்டி, பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார். பின்னர் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 05 பயனாளிகளுக்கு தலா ரூ.50,000/ வீதம் ரூ. 2,50,000/ வைப்புத்தொகைக்கான இரசீதினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி.மதிவதனா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000